பக்கங்கள்:-23

# காலை முரசு

## பிள்ளைகள் வெளிநாட்டில்

# மன விரக்தியடைந்த தந்தை உயிர்மாய்ப்பு

### யாழ். ஏழாலையில் சோகம்

யாழ்ப்பாணத்தில் மன விரக்தியில் இருந்த வயோதிபர் ஒருவர் நேற்று தவறான முடிவெடுத்து கிணற்றில் வீழ்ந்து உயிர்மாய்த்துள்ளார். 06

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 03 | வெள்ளிக்கிழமை | 17.05.2024 | அதிர்வு 290

# முள்ளிவாய்க்கால் கஞ்சி பருகும் இராணுவத்தினர்

(விரிவான செய்தி உள்பக்கத்தில்)



# நினைவேந்தல் நிகழ்வைத் தடுத்து தமிழர்களை மேலும் புண்படுத்தாதீர்!

## அரசிடம் மைத்திரி பகிரங்க வேண்டுகோள்

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஈடுபடும் தமிழ் மக்களைக் கைது செய்து அவர்களின் மனதை மேலும் புண்படுத்த வேண்டாம் என்று அரசிடம் கோரியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

திருகோணமலை, மூதூர் - சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறியமைக்காக நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதற்குக் கண்டனம் தெரிவித்துக் கருத்து வெளியிடும்போதே மைத்திரிபால மேற்கண்டவாறு கூறியுள்ளார். 06



# O/L பரீட்சையில் மேலும் சில மோசடிகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு




ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மேலும் சில மோசடிகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, 14 மாணவர்களுக்குப்புவியியல்வினாத் தாளில் சில பிரிவுகள் வழங்கப்படவில்லை 06




நாளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம்.

இந்தப் பதினைந்து ஆண்டுகளில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகின்றமை போல அவரின் நல்லாட்சி அரசின் காலத்தில்தான் நினைவேந்தும் உரிமை கூட பெரும் கறார் – பிகு – காட்டப்படாமல் வழங்கப்பட்டிருந்தது என்பது மறுக்கப்படக் கூடியதல்ல.

ஜனாதிபதித் தேர்தலை தந்திரோபாயமாக – நமக்குச் சாதகமாக – கையாண்டால் என்ன லாபம் என்பதற்கு 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# இலங்கை, இந்திய மீனவர்கள் 17 பேர் நேற்று சிறைப்பிடிப்பு!



(ந.லோகதயாளன்)

இலங்கை, இந்திய மீனவர்கள் 17 பேர் 6 படகுகளுடன் இலங்கை, இந்தியக் கடற்படையினரால் நேற்று சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

5 படகுகளில் மீன் பிடிககச் சென்ற 14 இலங்கை மீனவர்களை (வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள்) இந்தியாவின் காரைக்கால் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காரைக்காலுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேநேரம் தமிழகம், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மல்லிப்பட்டின மீனவர்கள் மூவர் பயணித்த படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக மாதகல் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

இவ்வாறு கரை ஒதுங்கிய படகில் பயணித்த மூன்று தமிழக மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இளவாலைப் பெலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.









# அமைச்சரவையில் இருந்து விஜயதாஸவை நீக்குங்கள்!

## ஜனாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றுமாறு அமைச்சர்கள் சிலரும், மொட்டுக் கட்சி உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்குவதற்கும், எதிரணி அரசியலுக்குத் தலைமைத்துவம் வழங்கும் வகையிலும் செயற்படுவதாலேயே விஜயதாஸ தொடர்பில் மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு ஜனாதிபதி ரணில் சாதகமான பதில் வழங்கவில்லை.

"தன்னை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்ற நோக்கிலேயே ரொஷான் ரணசிங்க செயற்பட்டார், அதன்மூலம் அரசியல் இலாபம் பெற முற்பட்டார். அதேபோல் விஜயதாஸவையும் நீக்கினால் அவரும் பிரசாரம் தேடலாம். எனவே, நேரம் வரும்போது உரிய முடிவை எடுக்கலாம்." – என்று ஜனாதிபதி கூறியுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

# எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயார்!

## மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த அறிவிப்பு



"நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் சரி எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருக்கின்றது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அரசுக்கும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

"நான் உட்பட கட்சியின் 99 வீதமான உறுப்பினர்கள் தேசிய சொத்துக்களை விற்பனை செய்வதற்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

இந்த அரசின் சில செயற்றிட்டங்களை நாங்கள் அங்கீகரிக்கவில்லை.

நாட்டின் நலனுக்காக அரசில் இருந்து விலகிச்செயற்படுவதற்கும் நாம் தயார்." – என்றும் மஹிந்த மேலும் தெரிவித்தார்.

# உயர் தர கற்றல் செயற்பாடுகள் ஜூன் 4 ஆம் திகதி தொடங்கும்

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பாடசாலை உயர் தர வகுப்புக் கற்றல் செயற்பாடுகள் ஜூன் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான சுற்றுநிருபம் அனைத்து மாகாணங்களினதும் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றுநிருபம் இதுவரை கிடைக்கப்பெறாத அதிபர்கள், மாகாண அல்லது வலய கல்வி அலுவலகங்களில் அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் இந்த விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்ய போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர் குறித்து ஆராய விசேட தூதுக்குழு ரஷ்யாவிற்கு அனுப்பப்படும்

## வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவிப்பு



"ரஷ்ய – உக்ரைன் போரின் தொடர்புபட்டிருக்கும் இலங்கையர்கள் குறித்து ஆராய்வதற்காக விசேட தூதுக் குழுவொன்றை ரஷ்யாவிற்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்."

– இவ்வாறு வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே தாரக பாலசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தற்போது வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து ரஷ்ய உக்ரைன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர்களின் கணக்கெடுப்பை நடத்தி வருகின்றன. சுற்றுலா விசாவில் இலங்கையர்கள் சிலர் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் முப்படைகளிலிருந்து ஓய்வு பெற்ற வீரர்கள். ரஷ்யாவிற்கு எத்தனை பேர் சென்றிருக்கிறார்கள் என்ற கேள்விதான் தற்போதைய பிரச்சினையாக காணப்படுகிறது. உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் படி ரஷ்யாவில் 600-800 வரையிலானவர்கள் அல்லது அதற்கு அதிகமானவர்கள் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், அரசாங்கம் என்ற வகையில், ரஷ்யாவில் இருக்கும் இலங்கையின் ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவில் போரில் பங்கேற்றிருப்பது தொடர்பில் தகவல் வெளிப்படுத்திய ஊடகங்களுக்கு நன்றி. ரஷ்யாவில் இவர்கள் தங்கியிருக்கும் பிரதேசம் தொடர்பில் அறிய முடியாமல் இருப்பதே தற்போதைய சிக்கலாகும்.

ரஷ்ய குடியுரிமை வழங்குவது போன்ற பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆள் கடத்தல்காரர்கள் இவர்களை ரஷ்யாவிற்கு அழைத்துச் சென்றுள்ளனர் என அறிய கிடைத்துள்ளது. இந்த ஆள்கடத்தல் செயற்பாடுகளில் இராணுவ உயர் அதிகாரியொருவருக்கும் தொடர்பு இருப்பதாக தெரிய வந்திருக்கிறது.

எவ்வாறாயினும் ரஷ்யாவிற்கு ஆள்களை அனுப்புவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மை நிலைமையை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். பின்னர், இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி அங்கு சென்றுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்து வர முடியும் என நம்புகிறோம். அரசாங்கம் அதற்காக முழுமையாக அர்பணிக்கும்.

வெளிவிவகார அமைச்சர் வெளிநாடு சென்றிருக்கும் நிலையிலும், ரஷ்ய – உக்ரைன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர்கள் குறித்து ஆராய்வதற்கான விஷேட தூதுக்குழுவொன்றை ரஷ்யாவுக்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் ரஷ்ய தூதுவர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று ரஷ்யாவுக்கு அனுப்பப்படவுள்ளது. இது குறித்து ரஷ்ய தூதரகத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்." – என்றார்.

# செஹானுக்கு உயிர் அச்சுறுத்தல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது



நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கு, உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர் ஒருவரால் அவரது அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் அழைப்பு மேற்கொள்ளப்பட்டு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க போட்டியிடுவதை அனுமதிக்க முடியாது என அந்த அழைப்பை மேற்கொண்டவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், நீதிமன்ற உத்தரவைப் பெற்ற பின்னர், தொலைபேசி அறிக்கை மூலம் சந்தேகநபரை அடையாளம் காணும் பணியில் தாங்கள் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பருத்தித்துறையில் நடக்கும் இலவச யோகா வகுப்புகள்



யாழ். பருத்தித்துறையில் இலவச யோகாசன வகுப்புகள் இடம்பெறுகின்றன.

யோகாசன ஆசிரியர் மா. இரத்தினசோதியால் நடத்தப்படும் இந்த வகுப்புகள் சனி, ஞாயிற்று மற்றும் செவ்வாய் கிழமைகளில் இடம்பெறுகின்றன.

சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் காலை 6.30 தொடக்கம் 8.00 மணி வரை தும்பளை அஞ்சலியகத்தில் யோகா வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

செவ்வாய் கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு ஓடக்கரை, ஞானாலயத்தில் வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

இந்த இலவச யோகாசன வகுப்புக்களில் வயது வேறுபாடு இன்றி அனைவரும் பங்கேற்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

INDSRI FERRY

# தாமதத்திற்கு வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும், தாமதமான கப்பலின் வருகையினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை. சேவையினை **ஞாயிற்றுக்கிழமை 19/05/2024** இல் இருந்து இயக்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். இதுவரை பதிவு செய்த பயணிகளை 19/05/2024 சேவைக்கு கட்டனமின்றி மாற்றியுள்ளோம்.

பதிவு செய்த பயணிகள் 19/05/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் விரும்பிய திகதிகளில் பயணிக்கலாம் அல்லது செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். செலுத்திய கட்டணத்தினை பெற்றுக்கொள்ளலாம்.



**IndSri Ferry Services Pvt Ltd**
**# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,**
**Thousand Lights West, Nungampakkam,**
**Chennai - 600034, Tamil Nadu, India.**

ANDROID APP ON Google play | Download on the App Store

W: www.sailindsri.com

# 10ஆவது உலக நீர் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி நாளை இந்தோனேசியா புறப்படுகிறார்




இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறும் 10 ஆவது உலக நீர் மாநாட்டின் உயர்மட்டக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தோனேசியா பயணமாகிறார்.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்கிறார்.

"கூட்டு செழுமைக்கான நீர்" என்ற தொனிப்பொருளில் 10 ஆவது உலக நீர் மாநாடு மே 18 முதல் 20 வரை இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி மாநாட்டில் விசேட உரையாற்றவுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இந்தோனேசிய ஜனாதிபதி உள்ளிட்ட அந்நாட்டின் பல உயர்மட்ட பிரதிநிதிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதியுடனான விஜயத்தில் ஜனாதிபதி செயலக மற்றும் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்றும் இணைந்து கொள்கிறது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லாட்சி அரசின் இந்த விடயமும் ஓர் உதாரணம்தான்.

இந்தச் சமயத்தில் – தெற்கின் இந்தக் கெடுபிடி போக்குகளுக்கு மத்தியிலும் – முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கொழும்பிலும் அனுஷ்டிக்க தெற்கில் பௌத்த இளைஞர் அமைப்பு, தர்ம சக்தி அமைப்பு, ஜனநாயகச் சீர்திருத்தம் மற்றும் தேர்தல் கற்கைக்கான நிறுவனம்,சிறந்த இலங்கைக்கான சங்கம், உலகத் தமிழர் பேரவை ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருக்கின்றன. இந்த குழுமம்தான் முன்னர் 'இமாலயப் பிரகடன' விடயத்திலும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை. அதேவேளை தமிழர் தேசத்தை வெற்றி கொண்ட திருநாளாக நாளை மறுதினத்தை – 19ஆம் திகதியை – இலங்கைப் படைகள் அனுஷ்டிக்கின்றன. இந்த இரண்டு நாள்களையும் தவிர்த்து, இன்று மாலை 6 மணிக்கு கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவன புத்தர் சிலைக்கு அருகில், 'யுத்தத்தில் பற்றி யெரிந்த உள்ளங்களை ஆற்ற, மனித நேயம் மிக்க நட்பு ரீதியான கூட்டம்' ஒன்றை இந்த அமைப்புகள் கூட்டாக ஏற்பாடு செய்திருக்கின்றன.

'வடக்கிலும் தெற்கிலும் மரணித்தவர் நம்மவரே. எம் தாய் நாட்டில் தம் உயிரை இழந்த அவர்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனையோடு மௌனம் செலுத்தி அஞ்சலி செய்ய வாருங்கள் கைகோர்ப்போம்... விளக்கொன்றை ஏற்றுவோம்...!' என்று அத்தரப்புகள் கூட்டாக அழைப்பு விடுத்திருக்கின்றன.

விளக்கேற்றி மௌன அஞ்சலி செலுத்தும் இந்த நிகழ்வுக்கும், தெற்கில் இப்போது மீண்டும் பற்றியெரிய ஆரம்பித்திருக்கும் பேரினவாத நெருப்பு இடம் விட்டுத் தருமா என்பதை நாம் இன்று மாலை காணலாம்.

இதேசமயம், இந்த அமைப்புகள், வன்னி மக்கள் ஒன்றியம், வன்னி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிள்ளைகளின் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நாளை மாலை 5 மணி முதல் 6.30 மணி வரை, போரினால் உயிர் நீத்த உறவுகளை நினைவேந்தும் நிகழ்வை வவுனியா நகர சபை மைதானத்தில் நடத்த உள்ளன.

எல்லாத் தரப்பினரும் சேர்ந்து, ஒன்றுபட்டு, யுத்தத்தில் கொல்லப்பட்டோருக்கான ஆற்றுப்படுத்தலை மேற்கொள்வது நல்லதுதான். வரவேற்கத்தக்கது தான்.

ஆனால், இந்த அணுகுமுறை, யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்டோருக்கான நீதி கிட்டுவதை நிலவிரிப்புக்குள் போட்டு, சத்தம் சந்தடியின்றி மூடும் அம்சடக்கு வேலையின் ஒரு பங்கோ என்ற சந்தேகம்தான் பலரினதும் மனதையும் நெருடிக் கொண்டிருக்கின்றமையையும் குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

## மன விரக்தியடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏழாலை கிழக்கு, ஏழுகோவில் பகுதியைச் சேர்ந்த 76 வயதான ஐயாத்துரை தியாகராஜா என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி வயோதிபரின் மனைவி ஏற்கனவே உயிரிழந்துள்ளார். அவரது பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் வசித்து வருகின்ற நிலையில், அவர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் மன விரக்தியடைந்த அவர் நேற்று அவரது வீட்டில் உள்ள கிணற்றில் வீழ்ந்து உயிர்மாய்த்துள்ளார். இந்த காட்சி அங்கிருந்த சி.சி.டி கேமராவில் பதிவாகியுள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## நினைவேந்தல் நிகழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:–

"இலங்கையில் இடம்பெற்ற போரில் உயிரிழந்தவர்களை நினைவேந்தி அஞ்சலிக்க அவர்களின் உறவுகளுக்கு முழு உரித்து உண்டு. அதை இன ரீதியாகவோ அல்லது மத ரீதியாகவோ பிரித்துப் பார்க்க முடியாது.

எனவே, இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் மக்களை அவர்களின் உறவுகள் நினைவேந்த அரசு அனுமதிக்க வேண்டும். அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடி எந்தத் தடை உத்தரவுகளையும் அரசு விதிக்கக்கூடாது.

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஈடுபடும் தமிழ் மக்களைக் கைது செய்து அவர்களின் மனதை மேலும் புண்படுத்த வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

நினைவேந்தல் நிகழ்வைக் காரணம் காட்டி கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது ஆட்சியில் – நல்லாட்சி அரசில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நடத்த அனுமதி வழங்கியிருந்தேன். உயிரிழந்தவர்களை வைத்து இன ரீதியில் – மத ரீதியில் அரசியல் நடத்தும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை." – என்றார்.

## O/L பரீட்சையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதேபோல், இரண்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்களால் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ள நிலையில், அந்தப் பரீட்சையில் பிழைகள் காணப்பட்டன என்றும், பரீட்சை நிலையங்கள் சிலவற்றில் மோசடிகள் இடம்பெற்றன என்றும் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்தநிலையில், மினுவாங்கொடை கல்வி வலயத்தின் அல்ஹமான் முஸ்லிம் மகா வித்தியாலத்தில் தமிழ் மொழி மூலப் பரீட்சையில் தோற்றிய 14 மாணவர்களுக்குப் புவியியல் பாடத்தின் முதலாவது வினாத்தாள் மற்றும் வரைபட பகுதி வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக இலங்கையர்களை ரஷ்யாவுக்கு அனுப்பிய இருவர் கைது



ரஷ்யா இராணுவத்தில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவார்கள் எனக் கூறி சட்டவிரோதமான முறையில் ரஷ்யாவுக்கு இலங்கையர்களை அனுப்பி வைத்தனர் என்று கூறப்படும் நுகேகொடை பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நீர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும், மேற்படி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உரிமத்தை இடைநிறுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றுவதற்காக இலங்கையர்களைச் சுற்றுலா விசா மூலம் ரஷ்யாவிற்கு அனுப்புவதாகக் கூறி ஒவ்வொரு நபர்களிடமிருந்தும் தலா 15 லட்சம் ரூபா பணம் பெற்றனர் எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு ரஷ்யாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட இலங்கையர்கள் ரஷ்யா -உக்ரைன் போர்க் களத்திற்குக் கடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடர்பில் இதுவரை 7 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், அந்த நிறுவனத்தினால் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகளவான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# குருக்களின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற கொள்ளையர்!

## சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் சம்பவம்

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஆலய குருக்கள் ஒருவருடைய இரண்டு பவுண் சங்கிலியை கொள்ளையர்கள் அறுத்துச் சென்றிருக்கின்றனர் என சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருக்களுடைய வீட்டிற்குச் சென்ற இருவர் சாதகம் எழுத வேண்டும் எனக் கூறி குருக்களை நெருங்கி அவருடைய கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்திருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# விஜயதாஸவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுக்கும் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. எனினும் மனுதாரர் மேலதிக தகவல்கள், விவரங்களை உள்ளடக்கி புதிதாக மனுவை மன்றில் சமர்ப்பிக்கும் உரிமையை நீதிமன்றம் மறுக்கவில்லை எனவும் நேற்றைய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தாக்கல் செய்திருந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு அந்த மனுவில் அவர் கோரியிருந்தார்.

எவ்வாறாயினும், மேற்படி நியமனத்துக்கு இடையூறு செய்வதை தடுக்கும் வகையில் கடுவலை மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதால் மனுதாரர் கோரிய தடை உத்தரவை பிறப்பிக்க முடியாது என விஜயதாஸ ராஜபக்ஷ



வின் சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் இது தொடர்பான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# படு உஷாராக இருப்போம்!

வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, தமிழர் சார்பில் பொது வாக்கெடுப்பாக அதைப் பின்பற்ற வேண்டும் என்று கோரிக்கை சில தரப்புகளினால் வற்புறுத்தப்பட்டு வருகின்றது.

ஈழத் தமிழர் அரசியல் கட்டமைப்பு, செயற்பாட்டு ரீதியிலும், கோட்பாட்டு அடிப்படையிலும், பல பிரிவுகளாகப் பிளவு பட்டு, பிரிந்து, துண்டுகளாகி, நலிந்து கிடக்கையில் இந்த விஷப் பரீட்சைக்குள் தமிழினத்தைத் தள்ளும் பொறுப்பற்ற போக்கு முன்னெடுக்கப்படுகின்றது.

அதனால் தமிழ்த் தேசியம், தமிழர் தேசமென்ற கோட்பாட்டியல்களை எல்லாம் ஒரே விஷப் பரீட்சையில் விழுத்தி, மூழ்கடித்து, சாகடிக்க வைக்கும் பெரும் சதித்திட்டத்தின் ஒரு பங்கோ இந்த நகர்வு என்று சிந்திக்க வேண்டிய தேவையும் ஒருபுறம் எழுகின்றது.

1976 இல் மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு 1977 பொது தேர்தலில் தமிழர் தேசம் தனது வாக்குகள் மூலம் அங்கீகாரம் தந்தது.

அதேபோல தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகள் புலிகளே என்ற கருத்தியலை 2004 பொதுத்தேர்தலில் தமிழர் தேசம் திரண்டு வாக்களித்து, இருபத்திரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்து அங்கீகரித்தது.

2009 க்குப் பின்னர், வந்த பெரும்பாலும் அனைத்து தேர்தல்களிலும் சமஷ்டித் தீர்வு என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி, தமிழர் பிரதேசத்தில் தமிழ்த் தேசியப் பிரதிநிதிகளை அதிகம் தெரிவு செய்ய வைத்தமை மூலம் அந்த விடயத்துக்கும் தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டே வந்துள்ளது.

இந்த வாக்களிப்புகள் - தமிழ் மக்களின் கருத்து வெளிப்பாடுகள் - எப்படியாக அமைந்தாலும், அவற்றின் முடிவுகள் சட்டமாக்கப்படவில்லை. தமிழ் மக்களின் வெறும் கருத்தியல் வெளிப்பாடாக அவை அடையாளப்படுத்தப்பட்டு நிற்கின்றன. அவ்வளவே.

ஆயினும், இந்திய தேசம் தனது வல்லாதிக்கத் தலையீட்டின் மூலம் இலங்கை மீது திணித்த இலங்கை - இந்திய ஒப்பந்தமும், அதனை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலமான மாகாண சபை முறைமையும் சர்வதேச மட்டத்திலான ஒப்பந்தமாகவும், அரசமைப்புச் சட்ட அங்கமாகவும் அங்கீகாரம் பெற்று நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

அந்த அங்கீகாரம், 13ஆம் திருத்தத்துக்கும் மாகாண சபை முறைமைக்கும் பெயரளவில் இருந்தாலும், அவை எவற்றுக்கும் தமது வாக்குரிமை மூலம் தமிழ் மக்கள் அங்கீகாரம் தந்தார்கள் அல்லர். அவ்வப்போது வடக்கிலும், கிழக்கிலும் நடந்த சில மாகாண சபை தேர்தல்களில் - அவை தம் மீது திணிக்கப்பட்ட தேர்தல்கள் என்ற முறையில் - தமிழர் தேசம் அவற்றில் பங்கு பற்றியதே தவிர, அந்த முறைமையை அங்கீகரிக்கும் வாக்களிப்பு எதிலும் தமிழ் மக்கள் பங்கு பற்றவும் இல்லை, அங்கீகரித்து கருத்து வெளிப்பாட்டை பிரதிபலிக்கவும் இல்லை.

ஆயினும், இலங்கை நாட்டில் சட்டமாக உருவாக்கப்படாத தனி நாட்டுக் கோரிக்கைக்கும், பின்னர் சமஷ்டித் தீர்வுக்கும் தமிழ் மக்களின் தனித்துவ வாக்களிப்பு மூலமான அங்கீகாரம் கிட்டியிருக்கின்றமை மட்டுமல்லாமல், அது தொடர்ந்து வரும் வாக்களிப்புகளில் அங்கீகாரமாகத் தொடர்கின்றமையும் கண்கூடு.

மறுபுறத்தில் சட்டத்தில் - அரசமைப்பில் - இருக்கும் 13 ஆம் திருத்தத்துக்கும் மாகாண சபை முறைமைக்கும் தமிழ் தேசத்தின் - தேசியத்தின் - அங்கீகாரமோ அல்லது இணக்கமோ ஒரு தனித்துவ வாக்கெடுப்பு மூலம் வழங்கப்படவேயில்லை.

இந்தப் பின்புலத்தில் பொதுவாக்கெடுப்பு என்ற களத்துக்குள் தமிழர் தேசத்தை தள்ளி, தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோஷத்தை அதில் முன்நிறுத்தி, விழுத்தி, அந்தக் கோரிக்கை பலத்த வெற்றியை ஈட்டாமல் போனால், 'தனி நாட்டு கோரிக்கை, சமஸ்டி கோரிக்கை எல்லாம் 'அவுட்!' இனி 13 பற்றியும், மாகாண சபை முறைமை பற்றியுமே தமிழர் தரப்பு பேசலாம் என்ற நிலையை ஏற்படுத்தலாம் என தரப்புகள் திட்டமிடுகின்றனவோ என்றுதான் தற்போதைய சூழ்நிலையை எண்ண வேண்டி உள்ளது.

தமிழர் தேசத்தின் கருத்து நிலைப்பாடு யாது என்பது வரிசையாக ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்பட்டு வருகையில், இந்தத் தேர்தலை ஒரு பொது வாக்கெடுப்பாக மாற்ற முயலும் திட்டத்தை அப்படித்தான் நோக்க வேண்டி இருக்கிறது.

தமிழர் தரப்பு படு உஷாராக - எச்சரிக்கையாக - 'அலேர்டாக' - இருக்க வேண்டிய காலம் இதுதான்!

# அகதிகளுக்கு குடியுரிமை வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்கிறார் மோடி

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ், அகதிகளுக்கு குடியுரிமை வழங்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் லால்கஞ்ச் பகுதியில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, காங்கிரஸ்/ம், சமாஜ்வாதி கட்சியும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் என்ற பெயரில் பொய்களைப் பரப்பி நாட்டில் கலவரத்தை ஏற்படுத்த முயல்வதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், யார் என்ன செய்தாலும், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை யாராலும் அகற்ற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், எதிர்க்கட்சியினர் நாட்டை பிரிவினை வாதம் என்னும் தீயில் தள்ள முயற்சி செய்து வருவதாகவும் பிரதமர் நரேந்திரமோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

# அமித்ஷாவை பிரதமராக்குவதற்கு நரேந்திர மோடி திட்டமிட்டுள்ளார்

## அரவிந்த் கெஜ்ரிவால் கூறுகின்றார்



இந்தியாவின் நாடாளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெறுமானால் 2025ஆம் ஆண்டின் புதிய பாரத பிரதமராக அமித்ஷா பதவியேற்பார் என ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் புது டில்லியின் முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 5 ஆம் கட்ட நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்திற்காக உத்தர பிரதேச மாநிலத்தில் உரையாற்றும் போது அரவிந்த் கெஜ்ரிவால் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனினும் பாரதிய ஜனதா கட்சிக்கு வெற்றிவாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவு எதிர்வரும் 20 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரவிந்த் கெஜ்ரிவால்,

"அடுத்த ஆண்டு செப்டம்பர் 17 ஆம் திகதியுடன் பிரதமர் மோடிக்கு 75 வயதாகிவிடும்.

அதன் பின்னர் இந்திய பிரதமராக அமித் ஷாவிற்கு வழி விடுவதற்கு மோடி முடிவெடுத்துள்ளார். 75 வயதுடன் ஓய்வு பெறப்போவதாக இந்திய பிரதமர் நரேந்திரமோடி இதுவரை அறிவிக்கவில்லை.

இந்தத் தேர்தலில் அமித் ஷாவுக்காகவே நரேந்திர மோடி வாக்கு சேகரிக்கிறார்.

உத்தர பிரதேச மாநில முதல்வராக இருக்கும் யோகி ஆதித்யநாத் இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட உள்ளார்.

இந்திய அரசியல் அமைப்பை மாற்றி எஸ்.சி மற்றும் எஸ்.டி பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டை இரத்து செய்ய பாரதிய ஜனதா கட்சி முயற்சிக்கிறது.

தற்போதைய நிலவரப்படி பாரதிய ஜனதா கட்சிக்கு 220 க்கும் குறைவான இடங்களே கிடைக்கும்.

ஹரியானா, டில்லி, பஞ்சாப், கர்நாடகம், மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சியின் வெற்றி வாய்ப்பு குறையும்.

அதனால், பாரதிய ஜனதா கட்சியால் மீண்டும் ஆட்சி அமைக்க முடியாது." – என்றார்.

# வாகன விபத்தில் நடிகை உயிரிழப்பு

பிரபல கன்னட மற்றும் தெலுங்கு சின்னத்திரை நடிகை பவித்ரா ஜெயராம் வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தனது குடும்பத்தினருடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுற்றுலா சென்ற போது பவித்ரா ஜெயராம் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

பவித்ரா ஜெயராமின் வாகன சாரதிக்கு வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனமையால் அவர்கள் பயணித்த கார், பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பவித்ரா ஜெயராம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் விபத்தில் காயமடைந்த மேலும் மூவர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




பவித்ராவின் மரணத்துக்கு இரசிகர்கள், திரைப்பிரபலங்கள் என பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# சீனாவுக்கு சென்றார் ரஷ்ய ஜனாதிபதி புடின்: உக்ரைனுடனான போர் பற்றி கலந்துரையாடல்







ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சீனா சென்று ஜனாதிபதி ஷி ஜின்பிங்கை சந்தித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதியாக ஐந்தாவது முறையாக பதவியேற்ற பின்னர் புடின் இந்த உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சீன ஜனாதிபதியுடனான தனது நேற்றைய சந்திப்பில், உக்ரைனுடனான போர் பற்றி கலந்துரையாடப்பட்டது என புடின் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – காஸா போரை முடிவுக்குக் கொண்டு வருவது மிகவும் அவசரமான இலக்கு என இரு நாட்டுத் தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

சீனாவிற்கான தனது இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு "எப்போதும் இல்லாத உயர்ந்த நிலையை" எட்டியதால் மேற்கொள்ளப்பட்டதாக ரஷ்ய ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நிலவும் கடினமான சர்வதேச சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தமது உறவு வலுவடைந்து வருவதாக அவர் சீன ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கு ஒரு நல்ல நண்பராக இருக்க தயாராக இருப்பதாக ஷி ஜின்பிங் தெரிவித்தாலும் அவருக்கு அதில் சில தடங்கல்கள் இருக்கின்றன. ரஷ்யாவிற்கு ஆயுத உதவிகளை வழங்கினால் பெய்ஜிங் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வொஷிங்டன் தயாராக உள்ளது.

ரஷ்யாவுடன் வணிக உறவுகளில் இருக்கும் பெய்ஜிங் மற்றும் ஹாங்காங்கைத் தளமாகக் கொண்ட சீன வங்கிகள், நிறுவனங்களுக்கு எதிராக புதிய பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா ஏற்கனவே அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மந்த நிலையில் உள்ள சீன பொருளாதாரத்தை வலுப்படுத்தும் விடயத்திற்கு முன்னுரிமையளித்து செயற்படும் கட்டாயத்தில் ஜனாதிபதி ஜின்பிங் உள்ளார்.

எனினும், மேற்கு நாடுகளின் அதிகரித்து வரும் அழுத்தங்களுக்கு மத்தியில் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்த இருவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த சந்திப்பையடுத்து, இரு நாட்டுத் தலைவர்களும் "புதிய சகாப்தத்தில் விரிவான மூலோபாய ஒத்துழைப்பின் கூட்டாண்மையை ஆழப்படுத்துதல்" குறித்து ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அதில், தமது நாடுகளின் நலன்கள், முக்கிய விடயங்களுக்கு ஆதரவளித்து செயற்படுவது தொடர்பில் விபரித்துள்ளனர்.

# பிரித்தானியாவில் அணுகுண்டு தயாரிக்க ஏதுவான பொருள்களுடன் பலர் கைது






பிரித்தானியா தலைநகர் லண்டனில் பெட்ஃபோர்ட்ஷையர் நகரில் அமைந்துள்ள ஒரு வீட்டிலிருந்து அணு குண்டை தயாரிக்கும் பொருள்களுடன் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் லண்டனில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியா பாதுகாப்பு அமைச்சு அவசரமாக கூடி இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் பெட்ஃபோர்ட்ஷையர் நகரிலுள்ள ஒரு வீட்டை பயங்கவாத தடுப்புப் பிரிவினர் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது வீட்டின் பின்னாலுள்ள தோட்டப் பகுதியிலிருந்து, ரேடியோ அக்டீவ் என்று அழைக்கப்படும் கதிரியக்க பொருள்கள். சிறிய ரக அணு குண்டு ஒன்றை தயாரிக்க ஏதுவான வெடி பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு அந்த வீட்டில் இருந்த பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடைய மேலும் பலரையும் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை பிரித்தானிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி மன்னார் பஸ் தரிப்பிடத்தில் பகிர்வு

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஸ் தரிப்பிடத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் பொழுது மன்னார் மாவட்டத்தில் யுத்த காலத்தில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், முப்படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள், உறவினர்களால் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

அருட்தந்தையர்கள், இளைஞர்கள், யுவதிகள் உட்பட அதிக மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்தி சென்றனர்.



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்:

# அமைதியான பிரார்த்தனைக்கு ஆறு. திருமுருகன் வேண்டுதல்

முள்ளிவாய்க்கால் அவலத்தில் உயிர் நீத்த அனைத்து ஆத்மாக்களையும் நினைந்து அமைதியான முறையில் பிரார்த்தனை செய்யுங்கள் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அறிக்கை ஒன்றின் மூலம் கோரியிருக்கின்றார்.

அவலமாக இறந்தவர்களுக்கான இறுதிக்கடன்களோ, அவர்களுக்கான சமய வழிபாடுகளோ நிறைவேற்ற முடியாத துயரத்தோடு உறவுகளை இழந்தவர்கள் வேதனையுறும் நிலையில் மனிதாபிமான பிரார்த்தனையை அனைவரும் செய்யவேண்டியது தார்மீகக் கடமையாகும். எனவே அனைத்து மக்களும் வேறுபாடின்றி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள் உருக்கமான வழிபாட்டை யாரும் குழப்பாதீர்கள். வழிபாட்டு நாளை அரசியல் விடயமாகக் கொள்ளாமல் அனைவரும் அமைதியகப் பிரார்த்திக்க வேண்டும்.

சைவமக்கள் பிதிர்களை நினைந்து வழிபாடு செய்யும் மரபுக்கமைய ஆலயங்களில் மோட்ச அர்ச்சனகளைச் செய்து வழிபாடு செய்யுங்கள். உலகில் எவருக்கும் இத்தகைய அவலங்கள் ஏற்படக்கூடாது என அனைவரும் இறைவ



னைப் பிரார்த்திப்போமாக.

– இவ்வாறு கலாநிதி.ஆறு.திருமுருகன் தமது அறிக்கையில் கோரியிருக்கின்றார்.

# ஐ.ம.சக்தியின் நுவரெலியா மாவட்ட தலைவரானார் மயந்த திஸநாயக்க

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட தலைவராகவும் தொகுதி அமைப்பாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் நேற்று வழங்கப்பட்டது.

நாடாளுமன்றஉறுப்பினர்மயந்ததிஸநாயக்க, முன்னதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட அமைப்பாளராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கல்விசாரா ஊழியர்களின் கொடுப்பனவு தொடர்பில் இந்த வாரம் தீர்மானம் என்கின்றார் சுரேன் ராகவன்



திறைசேரிக்கு கிடைத்துள்ள வரி வருமானத்தை கருத்தில் கொண்டு, கல்விசாரா ஊழியர்களின் கொடுப்பனவுகள் குறித்து இந்த வாரத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக வருடாந்தம் சுமார் 1.3 பில்லியன் ரூபா செலவாகும் எனத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு நேற்றும் இடம்பெற்றது.

அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசு சாதகமான பதில் வழங்காமையே பணிப்பகிஷ்கரிப்பிற்குக் காரணமாகும்.

அதன்படி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு 15 ஆவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தில் 15 வீத வட் அறவிடப்படுவது மற்றும் கல்விசாரா ஊழியர்களின் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுவதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழுவின் இணை தலைவர் தம்மிக்க எஸ். பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பிற்கு ஆதரவு வழங்க ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.






# நினைவேந்தல் தொடர்பில் ஒரு பொதுக் கொள்கை அரசுக்கு இல்லையா என ரணிலிடம் மனோ கேள்வி

நினைவேந்தல் தொடர்பில், ஒரு பொதுக் கொள்கை, அரசுக்கு இல்லையா என மனோ கணேசன் எம்.பி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

"நினைவேந்தல் தொடர்பில் ஒரு பொது கொள்கை ஏன் அரசுக்கு இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்றிரவு(புதன் இரவு) தொலைபேசியில் கேட்டேன். மேலும், தனிப்பட்ட இல்லம் ஒன்றுக்கு தேடி சென்று இறந்தவர்களை நினைவில் ஏந்தி நிற்கும் தமிழ் பெண்களை கதற வைத்து, இழுத்து சென்று கைது செய்யும் அளவுக்கு, ஸ்ரீலங்கா பொலிசுக்கு அப்படி என்ன அவசர தேவை இருக்கிறது?" - என்றும் கேட்டேன்.

"புலிகள் இயக்கம் சட்டப்படி தடை செய்யப்பட்டது. அது சட்ட பிரச்சினை. அதுபற்றி நான் இங்கே பேச வரவில்லை. ஆனால், அந்த இயக்கத்தின் சின்னங்கள் எதுவும் இல்லாமல் தங்கள் வீட்டில் கஞ்சி காய்ச்சி குடித்த மக்களை ஏன் தேடி போய் பொலிஸ் கைது செய்ய வேண்டும்? தடை செய்யப்பட்ட இயக்கத்தின் சின்னங்கள் இருந்தால் எப்போதும் கைது செய்யலாம்தானே. ஆகவே இதற்காக ஏன் விசேடமாக



நீதிமன்ற ஆணையை கேட்டு பெற வேண்டும்? இது தெரியாமலா அந்த நீதிமன்றமும் தடை உத்தரவுத் தீர்ப்பு வழங்கி உள்ளது? இதில் இருக்கும் மர்மம் என்ன? நினைவேந்தல் தொடர்பில் ஒரு பொது கொள்கை ஏன் அரசாங்கத்துக்கு இல்லை? தடை செய்யப்பட்ட இயக்கத்தின் சின்னங்கள் இல்லாமல் எவரும் தம் மறைந்த உறவுகளை நினைந்து நினைவேந்தல்களை நடத்தலாம் என அரசாங்கம் ஒரு பொதுக் கொள்கையை அறிவித்தால் என்ன?" - என்றும் நான் மீண்டும், மீண்டும் கேட்டேன்.

"இல்லை, அவர்கள் பொலிஸ் உடன் முரண்பட்டுள்ளார்கள். அதனால்தான் கைது. சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸிடம் கூறி விட்டேன். பிணை கோரிக்கையை எதிர்க்க வேண்டாம் என பொலிஸ/க்கு, சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் கூறி உள்ளார். ஆகவே அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்" என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க, அவசர, அவசரமாக பதில் அளித்தார்.

"பொலிஸ் அந்த வேளையில் அவர்களது வீட்டுக்கு சென்று கைது செய்ய முயன்றதால்தானே முரண்பாடு ஏற்பட்டது? முதலில் பொலிஸ் ஏன் தடை உத்தரவு பெற்றார்கள்? அரசாங்கம் சொல்லியா அதை அவர்கள் கிழக்கு மாகாணத்தில் செய்துள்ளார்கள்?" -என்று திருப்பி கேட்டேன்.

"அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்" என்று மட்டுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு அவசர, அவசரமாக பதில் கூறினாரே தவிர, "நினைவேந்தல் தொடர்பில் பொதுக் கொள்கை இல்லையா? அறிவிக்க முடியாதா?" என்ற எனது கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில் அளிக்கவில்லை, என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

# யாழ். பல்கலை மருத்துவ பீடத்திற்கான கட்டடத்தை ரணில் திறந்து வைப்பார்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக யாழ் நகரில் புதிதாகக் கட்டப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதிக் கட்டடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்திற்கு இருநாள் விஜயமாக வருகைதரும் ஜனாதிபதி இம்மாதம் 24 ஆம் திகதி இந்தக் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த கட்டடத் தொகுதியில் இரண்டு பெரிய தியேட்டர்கள், ஒரு சிறிய தியேட்டர், எண்டோஸ்கோபி மற்றும்



மேமோகிராம், கருவுறுதல் பராமரிப்பு, யூரோடைனமிக் சேவைகள், கேட்போர் கூடம், முதுகலை மையம் மற்றும் மருத்துவப் பணியாளர் அறை மற்றும் கற்பித்தல் வசதிகள் உள்ளன.

இந்தக் கட்டடத்தொகுதி 700 மில்லியன் ரூபாய் செலவில் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொருள்களின் விலை அதிகரிப்பால் செலவு அதிகரித்து கட்டடத் தொகுதி இன்னும் நிறைவு பெறாமல் இருப்பதுடன் கட்டடத்தை முழுமையாக நிர்மாணித்துப் பூர்த்தி செய்ய 130 மில்லியன் ரூபா தேவை என கணக்கிடப்பட்டுள்ளது.

TURNING POINT

வடக்கிலும் தெற்கிலும்
மரணித்தவர் நம்மவரே.

எம் தாய்நாட்டில் தம் உயிரை
இழந்த அவர்கள் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்தனையோடு மௌனம்
செலுத்தி அஞ்சலி செய்ய
வாருங்கள் கைகோர்ப்போம்....

சத்தியம் செய்யுங்கள்....
நாம் மாறிவிட்டோம் என்று.....

நாம் நம்மை அறிந்து
கொண்டோம் என்று
சொல்வதற்கு...

வாருங்கள் விளக்கொன்றை
ஏற்றுவதற்கு.....

**மே 17 | மாலை 6.00 மணிக்கு**

கொழும்பு விஹாரமஹாதேவி
பூங்காவன புத்தர் சிலைக்கு அருகில்

யுத்தத்தில் பற்றியெரிந்த உள்ளங்களை ஆற்ற,
மனிதநேயம் மிக்க நட்புரீதியிலான
கூட்டத்திற்கு,
தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

YMBA | Darmashakthi Organization | IRES | GTF | Sanga for Better Sri Lanka

# தென் கைலை ஆதீன இளைய சுவாமியின் மீது டென்மார்க் முருகன் ஆலயச் சுற்றாடலில் தாக்குதல்



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை தென் கையிலை ஆதீனத்தின் இளைய பட்டம் சுவாமி திருமூலர் தம்பிரான் அடிகளார் மீது டென்மார்க் முருகன் ஆலய சுற்றாடலில் வைத்து செவ்வாய் இரவு இனம் தெரியாத குழுவினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் திருமூலர் தம்பிரான் அடிகளார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பபட்டுள்ளார்.

ஆலய பூஜைகள் தமிழில் இடம் பெற வேண்டும் என வலியுறுத்தி வருபவர் திருமூலர் தம்பிரான் அடிகளார் என்றும், அதையொட்டிய முரண்பாட்டிலேயே இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.



# கற்பிட்டி – இப்பந்தீவு கடற்பிரதேசத்தில் நேற்று மிதந்து கொண்டிருந்த பீடி இலைச் சிப்பங்கள்!

## 11 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 338 கிலோ மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – இப்பந்தீவு கடற்பிரதேசத்தில் மிதந்துகொண்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் நேற்றுக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும் இந்தச் சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி – உச்சமுனை கடற்படையினரால் இப்பந்தீவு கடல் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போதே இந்த பீடி இலைகள் அடைக்கப்பட்ட உர மூடைகள் கடலில் மிதந்துகொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, 11 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 338 கிலோ கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் இந்த பீடி இலைகள், கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

எனினும் கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக அந்தச் பீடி இலைகளை கொண்டுவந்தவர்கள் அவற்றை கடலிலேயே கைவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட 338 கிலோ கிராம் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# முள்ளிவாய்கால் நினைவு தாங்கிய ஊர்தி வவுனியாவில் நேற்று வலம்

## மக்கள் திரண்டு கண்ணீர் மல்க அஞ்சலி

**(கே.வசந்தன்)**

முள்ளிவாய்கால் இனப்படுகொலை நினைவு தாங்கிய ஊர்தி நேற்று வவுனியாவிற்கு வருகை தந்த நிலையில் மக்கள் திரண்டு கண்ணீர் மல்க மலர்தூபி அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகிய முள்ளியவாய்கால் பேரவலத்தின் சாட்சியங்களை தாங்கிய ஊர்தி வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்குப் பயணித்து எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்கால் நினைவுத் திடலை சென்றடையவுள்ளது.

இந்நிலையில் வவுனியாவிற்கு வருகை தந்த ஊர்த்திக்கு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தீபம், ஏற்றியும் மலர் தூபியும் அஞ்சலி செலுத்தினர். இதன்போது தாய்மார் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியதுடன் வீதியால் சென்ற பலரும் அஞ்சலி செலுத்தினர்.

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம் – சுயநிர்ணயம் – இறைமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும் என்னும் வாசங்களை தாங்கியவாறும், போரின் வடுக்களை சுமந்த படங்களை தாங்கியவாறும் இந்த ஊர்தி பவனி வந்தது.

தொடர்ந்து பொங்கு தமிழ் நினைவுத் தூபி, பண்டாரவன்னியன் சதுக்கம், பசார் வீதி, குருமன்காடு, தாண்டிக்குளம், தரணிக்குளம், ஈச்சங்குளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் ஊர்தி சென்ற நிலையில் அங்கு மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.


























# முள்ளிவாய்க்கால் கஞ்சி இராணுவத்தினருக்கும்!

கிளிநொச்சியில், இலங்கை இராணுவத்தினருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில், பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வீதியில் பயணித்த பொது மக்களுக்கு மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதன்போதே, வீதியில் பயணித்த இராணுவத்தினரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் பெற்றுப் பருகியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, நேற்றைய தினமும் யாழ். உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

மன்னார் – நானாட்டான் பஸ் நிலையத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தோருக்காக அஞ்சலிலும் செலுத்தப்பட்டது.

மழைக்கு மத்தியில் இடம்பெற்ற நிகழ்வில், மத தலைவர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழாய்வு ஜூலை 4 இல் மீள ஆரம்பம்



முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழாய்வுகள் ஜூலை 04 ஆம் திகதி மீள இடம்பெறுமென முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்றில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டசெயலகம் அகழாய்வுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ள நிலையில் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுப்பணிகளை மீள ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இரு கட்டங்களாக இடம்பெற்ற அகழாய்வுகளின்படி அந்த மனிதப் புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக் கூட்டுத்தொகுதிகளும், தமீழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு போராளிகள் பயன்படுத்தும் இலக்கத் தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இரண்டாங்கட்ட அகழாய்வுப் பணிகளின்போது மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது.

அந்த ஆய்வின் மூலம் முல்லைத்தீவு – கொக்கிளாய் பிரதான வீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும் பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

இந்நிலையில் அகழாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றமையால் அகழாய்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

அடுத்த கட்ட நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதால் மீளவும் அகழாய்வுகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 04ஆம் திகதி கெக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி வளாகத்தில் இந்த வழக்கு அழைக்கப்படவுள்ளதாக இந்த வழக்குடன் தொடர்புடைய சட்டத்தரணிகளுள் ஒருவரான கே.எஸ்.நிறஞ்சன் தெரிவித்தார்.

அதேவேளை முல்லைத்தீவு – கொக்கிளாய் பிரதான வீதி அகழாய்விற்கு உட்படுத்தப்படவுள்ளதால், அந்த வீதிக்கு பதிலாக மாற்று வீதியைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கும், அகழாய்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் வீதிஅபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்தல்களை வழங்குமாறு, முல்லைத்தீவு நீதிமன்றம் கொக்கிளாய் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் சட்டத்தரணி நிறஞ்சன் தெரிவித்தார்.

# அம்மாச்சி உணவகத்தை ஆளுநர் கோப்பாயில் திறந்து வைத்தார்

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்குடன், பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று திறந்து வைத்தார்.

இதன்போது வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவும் வகையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஒதுக்கீட்டின் கீழ் 10 லட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான 12 தையல் இயந்திரங்களும் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பெண்களுக்கான பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்த அம்மாச்சி பாரம்பரிய உணவகம் கைகொடுக்கும் என இதன்போது உரையாற்றிய ஆளுநர் தெரிவித்தார். பெண்களுக்கு பொருளாதார விடுதலை கிடைக்கும் போது, அது குடும்பம், சமூகத்திற்கு கிடைக்கும் விடுதலையாக அமையும் என ஆளுநர் கூறினார்.

“கிராமிய அபிவிருத்திக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆளுமை பெற்றவையாக காணப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் அற்ற நிலையிலும், அரச அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் தற்போது செயற்படும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தங்களின் ஆளுமைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். தற்போது முன்னெடுக்கப்படும் இவ்வாறன செயற்பாடுகள் மகிழ்ச்சி அளிக்கின்றது. மேலும் பெண்களை வலுப்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். பெண்கள் பொருளாதாரத்தில் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். தங்களை, தாங்களே வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனூடாக பெண்கள் தங்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வை பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.” – என வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில் தெரிவித்தார்.


















# மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் அம்மையார் வருகை

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்கேற்கின்றார்



சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் அம்மையார் நேற்று நாட்டிற்கு வருகை தந்தார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்டின் தெற்காசியாவிற்கான முதல் விஜயம் இதுவாகும்.

அக்னெஸ் கலமார்ட் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி, இறுதிக் கட்ட யுத்தத்தில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் அவர் பங்கேற்கவுள்ளார் என சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். விஜயத்தில் 3 எம்.பிக்களை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை சந்தித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரை அமெரிக்க தூதுவர் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

வட மாகாண மக்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான சவால்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பொறுப்புக்கூறல் தொடர்பான அவர்களின் கோரிக்கைகள் மற்றும் சிறுபான்மையினரின் குரல்களை உறுதிப்படுத்துவதற்கான அவர்களது முன்மொழிவுகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க தூதுவருடனான சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று கருத்து தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான விடயங்களை அமெரிக்க தூதுவர் கேட்டறிந்து கொண்டார் என சிவஞானம் சிறிதரன் குறிப்பிட்டார்.

முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பகிர்ந்தளிப்பின் போது பெண்கள் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவது தொடர்பான விடயங்களையும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கேட்டறிந்து கொண்டார் எனவும் சிறிதரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.05.2024




இன்று மகிழ்ச் சிகரமான நாளாக இருக்காது. உங்கள் நம்பிக்கை மற்றும் லட்சியங்களை உணர நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியது அவசியம்.

சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படும். பணிகளை பொறுமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




உங்கள் பணிகளை சுமூகமாக மேற்கொள்வீர்கள். இன்றைய முக்கியமான நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் பணி யின் தரம் பாராட்டைப் பெறும்.உங்கள் பணிகளை உறுதியுடன் ஆற்றுவீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




ஆன்மீகத்திற்கு நேரம் ஒதுக்குங்கள். அதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. கூடுதல் செலவுகள் ஏற்படும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இன்று அது உங்களுக்கு மிகவும் கடினம்.

இன்று பணியில் அவ்வளவாக முனேற்றம் காணப்படாது. கூடுதல் பணிகளை செய்ய நேரும். பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது.வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் தைரியமான போக்கின் காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.

பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். பயணங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் உங்களுக்கு திருப்திகரமானதாக இருக்கும். முதலீடு மற்றும் சேமிப்பதற்கான ஆற்றல் காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று வெற்றிகரமான நாள் என்பதால் இந்த நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்றுவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை உங்களை வெற்றியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும், உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் இருந்து கொண்டே இருக்கும். கையில் இருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பணியில் சிறந்த பலன் பெற கவனமாக பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்காது. பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று யதார்த்த அணுகுமுறை மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல பலனைக் காணலாம்.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியிடத்தில் மாறுதல்களுக்கேற்ப பணி செய்ய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ளவேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். வரவும் செலவும் சமமாக காணப்படும். நிதி சம்பந்தமான முடிவுகளை இன்று எடுப்பது உசிதமல்ல.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.05.2024

## தனுசு

தொடர் முயற்சியின் மூலம் இன்று அனைத்திலும் வெற்றி காணலாம். நேர்மறையான எண்ணங்களை பராமரிப்பதன் மூலம் நல்ல அதிர்ஷ்டத்தைக் காணலாம்.

பணி நிமித்தமான பயணம் ஏற்படலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும். வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. ஆன்மீக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவது சிறந்த பலனை அளிக்கும்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கும்பம்

உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள். இன்று தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பது நல்லது.

பணியில் கவனம் தேவை. பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக தவறுகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக இன்று பண இழப்புகள் ஏற்படலாம். தேவையற்ற செலவும் இன்று ஏற்படலாம்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.

## மகரம்

உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்

உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகள் உங்களுக்கு கவலையையும் குழப்பத்தையும் உருவாக்கும்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்காது. பணியில் ஏற்படும் தவறுகளால் கவலை கொள்வீர்கள். எச்சரிக்கை தேவை.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணையுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. இன்று பணத்தை சிறப்பாக கையாள முடியாத சூழ்நிலையும் உருவாகலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# நினைவேந்தல் ஊர்தி நேற்று மன்னாரில்!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி நேற்றைய தினம் வியாழக்கிழமை மன்னாரை வந்தடைந்தது.

கடந்த 12 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமானது.

வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த நினைவேந்தல் ஊர்தி சென்று முள்ளிவாய்க்கால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்கால் வாரத்தின் 5 ஆவது நாளான நேற்று வியாழக்கிழமை ஊர்தி மன்னாரை வந்தடைந்தது. மன்னார் மாவட்ட பஸ் நிலையத்திற்கு முன் அஞ்சலி இடம்பெற்றது.

தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி இடம் பெற்ற ஊர்திப்பவனியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் கலந்து கொண்டு மலர் தூவி, தீபம் ஏற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

மன்னாரை தொடர்ந்து இந்த வாகன பவனி நேற்று மாலை வவுனியாவைச் சென்றடைந்தது.




# 1,700 ரூபா சம்பள வர்த்தமானி அறிவித்தல் பற்றிய ஆட்சேபனையை ஆராயும் தொழில் திணைக்களம்



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பிலான ஆட்சேபனைகளை ஆராய்ந்து வருவதாக தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் நேற்று முன்தினம் ஆட்சேபனைகளை தாக்கல் செய்திருந்தது.

ஆட்சேபனைகள் தொடர்பில் ஆராயப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் தொழில் அமைச்சருக்கு அறிக்கை அனுப்பி வைக்கவுள்ளதாக தொழில் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் சம்பளம் தொடர்பில் தொழில் அமைச்சர் தீர்மானம் எடுக்கவுள்ளார்.



# நாட்டில் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களை அண்மித்து ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக எதிர்வரும் நாள்களில் அதிக மழையுடனான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்திலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் பலத்த காற்றுடன் மழை பெய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழையுடனான வானிலையால் 06 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி கேகாலை, களுத்துறை, குருநாகல், நுவரெலியா, மாத்தளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# மூன்று மாதங்களில் 49 கைதிகள் சிறைகளிலிருந்து தப்பியோட்டம்

இந்த வருடத்தில் மூன்று மாதங்களில் 49 கைதிகள் சிறைச்சாலைகளில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடியவர்களில் இருவர் மாத்திரமே இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை ஆணையாளரும் ஊடகப்பேச்சாளருமான காமினி பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தப்பியோடியவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வீரவில திறந்தவெளி சிறைச்சாலை முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார்.

எப்பாவெல பகுதியை சேர்ந்த 34 வயதான கைதி ஒருவரே தப்பிச் சென்றுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் அந்த கைதிக்கு அநுராதபுரம் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.